# படிப்பு உதவிகள்

# வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இரட்சிப்பிற்கான தேவனுடைய திட்டம்

வெளிப்படுத்தின விசேஷம் மக்கள் கிறிஸ்தவர்கள் ஆவது எப்படி என்பதைக் கூறுவதற்கல்ல ஆனால் கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்துவதற்காக எழுதப்பட்டது. இருந்தபோதிலும், கர்த்தருக்குப் பதில்செயல் செய்வதற்கான அடிப்படைக் கொள்கைகள் இந்தப் புத்தகத்தில் உள்ளன, இயேசுவின் வருகைக்கு மக்கள் தங்களைத் தயாரித்துக் கொள்ளும்படி நீங்கள் அவர்களை உற்சாகப் படுத்துகையில் இவற்றை நீங்கள் பயன்படுத்த முடியும்.

இயேசுவின் மரணம் என்பதே சுவிசேஷத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது, இது வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும் வலியுறுத்தப்படுகிறது. அவர், ''நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி"னார் (1:6அ). அவர் ''சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து" (சபையாரை) தமது இரத்தத்தைக் கொண்டு தேவனுக்கென்று விலைக்கு வாங்கினார் (5:9ஆ). (7:14; 11:8; 12:11ஐயும் காணவும்.)

கிறிஸ்தவர்களோ அல்லது கிறிஸ்தவரல்லாதவர்களோ, நாம் யாவரும் கர்த்தருக்குச் செய்ய வேண்டிய பதில்செயல் ''நம்பிக்கை வைத்துக் கீழ்ப்படிதல்'' என்ற வார்த்தைகளில் தொகுத்துரைக்கப்பட முடியும். தேவனுடைய மக்கள் ''தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாய் இருக்கிறார்கள்" என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றனர் (12:17ஆ). ஜெயங்கொள்ளுகிறவர்கள் "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்கள்'' என்று விவரிக்கப்பட்டிருக்கின்றனர் (14:12; 2:13, 19ஐயும் காணவும்).

வெளிப்படுத்தின விசேஷத்தில், விலகிச் சென்றுள்ள பாவிக்கு இரட்சிப்பிற்கான நிபந்தனைகள் வெளிப்படையாகக் கூறப்படுவதற்குப் பதில், முன் அனுமானம் செய்யப்படுகின்றன. எல்லா மக்களும் - தவறு செய்கின்ற கிறிஸ்தவர்களோ அல்லது விலகிச் சென்றுள்ள பாவிகளோ யாராயிருப்பினும் - மனந்திரும்ப வேண்டும் என்பது அவசியமாக உள்ளது (2:5, 16, 21, 22; 3:3, 19; 9:20, 21; 16:9, 11). உண்மையுள்ளவர்களின் பெயர்களைக் கிறிஸ்து அறிக்கையிடுவார் (3:5) என்பது, நாம் அவரை அறிக்கையிடுதல் பற்றிய வாக்குத்தத்தத்தை எடுத்துரைக்கிறது (மத்தேயு 10:32, 33). ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் நமது வஸ்திரங்களைத் தோய்ப்பதினால் அவற்றைச் சுத்திகரிக்கின்றோம் என்ற குறிப்புகளை நாம் காணும்போது (7:14; 22:14), நாம் நடபடிகள் 22:16ஆவை நினைவுக்குக் கொண்டுவருகின்றோம்: "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு."

*வெளிப்படுத்தின விசேஷத்தின் வலியுறுத்தம் பின்வருவதாகவே உள்ளது: நீங்கள் ஞானஸ்நானம் பெற்றபின்பு - எது வந்தாலும் - கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (2:10ஆ; 2:13; 17:14ஐயும் காணவும்). கர்த்தரைப் பின்பற்றும்படி நீங்கள் மற்ற மக்களை உற்சாகப் படுத்துகையில், வெளிப்படுத்தின விசேஷத்தில் தரப்பட்டுள்ள பின்வரும் அழைப்புக்களை நீங்கள் அவர்களிடத்தில் பகிர்ந்துகொள்ள முடியும்:*

> *''இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (3:20).*
>
> *ஆவியும் மணவாட்டியும் "வா" என்கிறார்கள், கேட்கிறவனும் "வா" என்பானாக, தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக் கடவன்! (22:17; 2:7, 11, 17, 26-28; 3:5, 12, 21ஐயும் காணவும்).*

# ஏழு சபைகளுக்கு இயேசுவின் செய்திகள்

| | எபேசு | சிமிர்னா | பெர்கமு | தியத்தீரா | சர்தை | பிலதெல்பியா | லவோதிக்கேயா |
|---|---|---|---|---|---|---|---|
| வாழ்த்துதல் | 2:1 | 2:8 | 2:12 | 2:18 | 3:1 | 3:7 | 3:14 |
| இயேசுவைப் பற்றிய விவரிப்பு | 2:1 | 2:8 | 2:12 | 2:18 | 3:1 | 3:7 | 3:14 |
| பாராட்டுரை | 2:2, 3, 6 | 2:9, 10 | 2:13 | 2:19 | | 3:8-10 | |
| கண்டனம் | 2:4 | | 2:14, 15 | 2:20-23 | 3:1, 2 | | 3:15, 17 |
| எச்சரிக்கை மற்றும் அச்சுறுத்தல் | 2:5 | | 2:16 | 2:21-25 | 3:2, 3 | | 3:16, 18, 19 |
| புத்திகூறுதல் | 2:7 | 2:11 | 2:17 | 2:29 | 3:6 | 3:11, 13 | 3:22 |
| வாக்குத்தத்தம் | 2:7 | 2:11 | 2:17 | 2:26-28 | 3:5 | 3:10, 12 | 3:20, 21 |